SNS academy
a fingerprint school
*Sincerity, Nobility and Service*

**மாதத்தேர்வு - பிப்ரவரி 2020**

**வகுப்பு**: ஆறு **மதிப்பெண்கள்**:30

**பாடம்**: தமிழ் **தேதி:**

**I. சரியான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **8**

1. தேசம் உடுத்திய நூலாடை என கவிஞர் குறிப்பிடும் நூல் எது?
அ) நாலடியார் ஆ) திருக்குறள் இ) பழமொழி

2. கவிஞாயிறு என்னும் அடைமொழி பெற்றவர் யார்?
அ) தாராபாரதி ஆ) பாரதியார் இ) பாரதிதாசன்

3. ரௌலட் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்ட ஆண்டு எது?
அ) 1947 ஆ)1950 இ) 1919

4. காந்தியடிகளிடம் உடை அணிவதில் மாற்றத்தை ஏற்படுத்திய ஊர்
அ) மதுரை ஆ) தஞ்சாவூர் இ) திருச்சி

5. சிவகங்கையை ஆண்ட மன்னர் __________
அ) செல்லமுத்து ஆ) முத்துவடுகநாதர் இ) வேலுநாச்சியார்

6. வேலு நாச்சியார் சிவகங்கையை மீட்ட ஆண்டு எது?
அ) 1780 ஆ) 1784 இ) 1790

7. சொல் எத்தனை வகைப்படும்?
அ) ஐந்து ஆ) நான்கு இ) ஆறு

8. மா என்பது என்ன சொல்?
அ) பெயர்ச்சொல் ஆ) இடைச்சொல் இ) உரிச்சொல்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக**. 8

9. பாரதி என்பது ________________ சொல்.

10. பெயர்ச்சொல்லையும் வினைச்சொல்லையும் சார்ந்து வரும் சொற்கள் _______________.

11. வேலு நாச்சியாருக்கு படை உதவி செய்தவர் _________________.

12. ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய மற்றொரு பெண் அரசி _____

13. காந்தியடிகள் கற்க விரும்பிய மொழி _______________

14. தமிழ் நாட்டின் சொத்து என காந்தியால் புகழப்பட்ட கவிஞர் ______

15. தேசம் என்பதன் பொருள் ________________

16. காளிதாசனின் தேனிசைப் பாடல்கள் எதிரொலிக்கும் இடம் _______

**III. வாக்கியத்தில் அமைத்து எழுதுக.** **2**

17. பாரதம்

18. வீரம்

**IV. பிரித்து எழுதுக.** **2**

19. நூலாடை –

20. சுற்றுப்பயணம் –

**V. சேர்த்து எழுதுக.** **2**

21. காந்தி + அடிகள்

22. கதர் + ஆடை

**VI. பொருத்துக.** **4**

23. மெய் – 5000 படை வீரர்கள்

24. இலக்கிய மாநாடு – உண்மை

25. குற்றாலம் – சென்னை

26. ஐதர் அலி – அருவி

**VII. எதிர்ச்சொல் தருக.** **2**

27. உயர்வு –

28. தொடக்கம் –

**VIII. சரியா? தவறா? எனக் கண்டறிக.** 2

29. ஜான்சி ராணிக்கு முன்பே ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடியவர் வேலு நாச்சியார்.

30. காந்தியடிகள் ஆடம்பரமாக வாழ ஆசைப்பட்டார்.